பேருந்துகள் விடுகின்ற ஏற்பாட்டையும் நாம் நடைமுறையில் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் இதற்கு முடிவுக்கான திட்டம் போட்டு, செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் நிலையங்களில் அரசு பஸ்களும், தனியார் பஸ்களும், ஒன்றாக போக்குவரத்து வேலைகளைச் செய்கின்ற காரணத்தினால், தனியார் பஸ் முதலாளிகள் புரோக்கர் என்று சொல்லக்கூடிய ஆட்களை நியமித்து, அரசு பஸ்களில் பயணிகள் ஏறாமல் தடுத்து வருகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலைமை பேருந்து நிலையங்களில் இல்லாமல், அவர்களை வெளியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? உதாரணமாக, வேலூர் பஸ் நிலையத்திலே இப்படிப்பட்ட நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, புரோக்கர் என்று வைத்துக் கொண்டு, வருகின்ற பயணிகளை எந்த வண்டியில் போய் ஏற வேண்டுமென்று சொல்வதற்காக வைத்திருக்கிறார்கள். அதைத் தடுக்க முடியாது. ஆனால், நம்முடைய பேருந்துகளில் ஏறுவதைத் தடுப்பார்கள் என்று சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது. அதை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய நடத்துநர்கள் அப்படி விடுவதில்லை என்ற தகவல் இருக்கிறது. எனவே, தனியாக அதைப்பற்றித் தகவல் சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** அக்கப்பட்டு என்று உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் பேசும்போது சொன்ன வார்த்தையில் *** என்பதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.

*வினா எண். 1016—திரு. சி. கோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 மே 12]

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) ஆம்.

(ஆ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஒன்றை அமைத்து அதற்கான விண்ணப்பத்தினை துணைப் பதிவாளர் கூட்டுறவு சங்கம் கடலூருக்கு அனுப்பியுள்ளது. சங்கம் பதியப்பட்டவுடனும், மனைகள் கிடைத்தவுடனும் வீடு கட்டும் பணியை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கும்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல போக்குவரத்து நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கி வந்தாலும், அந்தப் போக்குவரத்துக் கழகங்களில் எல்லாம் இப்படிப்பட்ட வசதிகளை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை நல்ல முறையில் நடத்திச் செல்லப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, உடனடியாக அந்தத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் எற்கனவே சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறேன். ஒரு தனி அதிகாரியை நியமித்து, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் குறைந்தபட்சம் 100 வீடுகள் கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலும் 300 வீடுகள் கட்டுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 9.50]

21-2-1981 அன்று இந்த சங்கம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து தொழிலாளர்கள் தங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை எந்த ஆட்சிக் காலத்தில் வைத்தார்கள்? முதல் கட்டமாக எந்த போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு, எவ்வளவு மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, போக்குவரத்து தோன்றிய காலத்திலிருந்து இந்த கோரிக்கைகள் இருக்கின்றன. ஆனால் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும்தான் இதற்கான நடவடிக்கை முதன் முதலாக எடுக்கப் பட்டது. எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டது என்று கணக்குகள் எல்லாம் என்னிடத்தில் இல்லை. காரணம்

பொதுவாக இல்லாமல் தனிப்பட்ட முறையிலே கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. எனவே விவரங்கள் இல்லையென்று சொன்னாலும், சேரன் போக்குவரத்துக் கழகம்தான் முதன் முதலில் அதற்கான முழு முயற்சியை எடுத்தது என்பதை சொல்ல முடியும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற வீடு கட்டித் தரும் திட்டம் பல்லவன் போக்குவரத்துக் கழகம் புறநகர் பிரிவிற்கும் விரிவு படுத்த செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒட்டுமொத்தமாக சொல்லிவிடுகிறேன். ஒன்பது போக்குவரத்துக் கழகங்களுக்கும் அதை விரிவுபடுத்துகிற திட்டம் இருக்கிறதென்று சொல்லி நடந்துமுடிந்த மானியத்திலே 27–ம் தேதி சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கான படகு போக்குவரத்துப் பணி.

*வினா எண் 1017 திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டி விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கு செல்லும் படகு போக்குவரத்தை நிறுத்துவாக அறிவித்து உள்ளதா?

(ஆ) இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கமிட்டி அமைக்கப் பட்டதா?

(இ) படகு போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி படகுத்துறையில் மணலைத் தூர் வாரி எடுப்பதில் உள்ளூர் மீனவர்களுக்கும் விவேகானந்தா கேந்திரத்தினருக்குமிடையே தகராறு இருந்து வருகிறது. இப்பிரச்சினையில் ஒரு நிரந்தரத் தீர்வைக் காண ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடுத்த அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.